**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 75/2021.**

**அ.சா. 1 – திருமதி. பாண்டீஸ்வரி.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026.* * * * * * *

**(1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அ.சா.1 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

(1) வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால், மருத்துவமனையில் வைத்து 2 முறை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலம் எழுதி வாங்கியபின்னர், கடந்த 13.05.2020 ஆம் தேதி விசாரித்தார்கள். போலீசார் வழக்கு சம்பத்நமாக என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்களா? என்றால், இல்லை. மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். B.A., (English) படித்துள்ளேன். நான் வழக்கமாக ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வேன். தமிழில் கையொப்பம் செய்வேனா என்றால், எப்போதாவது செய்வேன். 2–வது எதிரி செல்லத்துரை என் மாமியாரின் அண்ணன் ஆவார். 3–வது எதிரி நதியா என் மாமியாரின், அண்ணன் மனைவி ஆவார்.

(2) நான் கொசவ செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றால், சரிதான். எதிரிகள் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். தற்போது, என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கைப்பட எழுதிக்கொடுத்த புகாரா? என்றால், நான் புகார் வாக்குமூலமாக கொடுத்ததை போலீசார் எழுதிக்கொண்டனர். அந்தப் புகாரில் சாட்சிக் கையொப்பம் என் மாமியார் செய்துள்ளார் என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாகச் சொல்லும் தேதி 12.05.2020 ஆம் தேதி காலை 06.30 மணி என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். நீதிமன்ற முதல் விசாரணையில், சம்பவம் 06.00 மணிக்கு நடந்ததாகச் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. 06.30 மணி என சொல்லியுள்ளேன். புகாரில்

பல இடங்களில் அடித்தல்–திருத்தல் உள்ளன என்றால், சரிதான்.

(3) எதிரிகள் சிமெண்ட் கல்லை எடுத்து எறிந்ததாக சொல்லியுள்ளேன், ஆனால் எந்த எதிரி எறிந்தார் என குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், சரிதான். நதியா மற்றும் செல்லத்துரை என் தலைமுடியைப் பிடித்து, இழுத்ததாகச் சொல்லியுள்ளேன். எதிரிகள் 3 பேரும் நீ எதற்கு இந்த வீட்டில் குடியிருந்து வருகிறாய், வீட்டைக் காலி செய் என்று என்னிடம் ஜாடையாகத் தெரிவித்தார்கள் என கூறியுள்ளேனா? என்றால், என்னிடம் நேரடியாக எதிரிகள் கூறினார்கள். இதுசம்பந்தமாக என் கணவரிடம் கூறினேனா? என்றால், எனது கணவரின் பெரியம்மாவிடம் தெரிவித்தேன். அதுசம்பந்தமாக புகார் எதுவும் கொடுத்தேனா? என்றால், இல்லை. சம்பவ சமயமாக பக்கத்திலிருந்து விலக்கிவிட்டவர்களின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளேனா? என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவர்கள்தான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள்.

(4) நான், நீதிமன்ற முதல் விசாரணையில், எதிரிகள் அனைவரும் சேர்ந்து அடித்ததாகக் குறிப்பிட்டுள்ளேன். எதிரிகள் 4 பேர்கள் அடித்தார்கள். நதியாவின் அண்ணன் ரவி என்பவர் இறந்துவிட்டார். எனது கணவர் சம்பவத்திற்குப் பின்னர் இருசக்கர வாகனத்தில் என்னை டொம்புச்சேரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளேன், எந்த வாகனம் என்றால் Splendor Plus இருசக்கர வாகனம் ஆகும். மருத்துவமனைக்குச் செல்லும்போது, இரவு 07.00 மணி முதல் 07.10 மணி இருக்கும். அதன்பின்னர், தேனி அரசு மருத்துவமனைக்குச் செல்லும்போது, இரவு 12.00 மணியிருக்கும். டொம்புச்சேரி மருத்துவமனையிலிருந்து, தேனி அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என முதல் விசாரணையில் கூறவில்லை என்றால், சரிதான். நான் ஆம்புலன்சில் சென்றேன்.

(5) புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது, என் கணவர் உடனில்லை, நான் மட்டும்தான் இருந்தேன். 1–வது எதிரியை அடித்துக் காயப்படுத்தியதாக குற்ற எண். 677/2020 என்ற வழக்கு என் கணவரின்மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். என் கணவர் பெயர் பிரகாஷ் ஆகும். சிங்கம் என்பவர் என்

கொழுந்தன் ஆவார். அந்த வழக்கானது என் கணவர், என் கொளுந்தன், வல்லரசு, பிச்சைமணி ஆகியோர்கள்மீது பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த C.C. No. 471/2022 என்ற வழக்கில் என் கணவரும் மற்ற நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறார்கள் என்றால், சரிதான். எனது மாமியாருக்கும், 1–வது எதிரிக்கும் சொத்து பாகம் பிரிப்பது சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சொன்னதுபோல், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால், சரியல்ல. 1–வது எதிரி என் கணவர்மீது புகார் கொடுத்துள்ளதால், நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

(6) நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவம் உண்மையிலேயே நடந்திருந்தால், அன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அதனால்தான் நான் புகாரை காலதாமதமாகக் கொடுத்துள்ளேன் என்றாலும், சரியல்ல. மருத்துவமனையில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த வழக்கில் என் கணவரை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். ஏற்கனவே இருந்த உரிமையியல் வழக்கு பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக என் மாமியாரின் தூண்டுதலின்பேரில், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரிகள் விடுவிக்கப்படவேண்டியவர்கள் என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.08.04 16:02:20 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**